TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

~~(Under Section 154 Cr.P.C.)~~

**(Under Section 173 BNSS)**

C 8129827

1. District : Erode  PS: Vigilance and Anti Corruption  Year: 2024  FIR No.: 7/Ac/2024  Date: 24.10.2024
மாவட்டம்  காவல்நிலையம்  ஆண்டு  மு.த.அ. எண்  நாள்

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act  Sections பிரிவுகள்: 7(a), 12 r/w 7(a)
(ii) Act சட்டம்: 1988 as amded by the P.C.  Sections பிரிவுகள்: 7A
(iii) Act சட்டம்: (Amendment) Act 2018  Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்  Date from : 23.10.2024 நாள் முதல்  Date to : 23.10.2024 நாள் வரை
Time Period : நேர அளவு  Time from : 15.40 hrs நேரம் முதல்  Time to : 2200 hrs நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 24.10.2024  Time நேரம் : 11.00 Forenoon.
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் —  Time நேரம் : —

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக  Tamil Computer Typed.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: South & about 15 K.M.
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : முறைக் காவல் எண்  (b) Address முகவரி : Office of Sub-Registry, Aval Poondurai, Modakuruchi Taluk.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : —  District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : M. ELANCHEZHIAN  (b) Father's/ Husband's Name : S. MUTHUSAMY
குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்  தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : 44 Years  (d) Nationality : Indian  (e) Passport No. : —
நாள் / பிறந்த ஆண்டு  நாட்டினம்  வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் —  Place of Issue : வழங்கப்பட்ட இடம் —
(f) Occupation : Tahsildar (LA) SPl. DY. Inspection Cell Officer.  (g) Address : District Backward class welfare office, 4th Floor, New Building, collectrate, Erode.
தொழில்  முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) 1) R. Muthukumar, Assistant, I/c SRO, Aval Poondurai, Erode. 2) V. Tamil Selvan, S/o Varanasi, 23 Muthukumara Samy St, Vellode Road, Erode. 3) G. Gowri-Sankar, S/o Ramasamy, -do- 4) M. Chandrasekaran, S/o Muthusamy, 259, Mukasi Anuman Palli, Arachalur, Erode. 5) A. Karthikeyan, S/o Arumugam, 73 Sengadan Palayam, Thuyan Poondurai, Erode.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

- No delay -

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Enclosed Separate Sheet

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ................................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ................................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

(signature) 24.10.24

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

(signature) 24/10/2024

15. Date & Time of despatch to the court: 24.10.2024
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 13.00 hrs

Name: பெயர் G. Arumugam,
Rank: நிலை Inspector of Police ......No. எண் ......
Vigilance and Anti-Corruption
Erode.

Attachment to Column 12 of Erode V&AC, Cr.No.07/AC/2024/ER, u/s 7(a), 7A and 12 r/w 7(a) of the Prevention of Corruption Act, 1988, as amended in 2018

சமர்பிக்கப்படுகிறது:

இன்று 24.10.2024 ஆம் தேதி காலை 11.00 மணிக்கு திரு.எம்.இளஞ்செழியன், சிறப்பு ஆய்வுக்குழு அலுவலர் / தனிவட்டாட்சியர், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகம், ஈரோடு அவர்கள் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரின் விவரம் பின்வருமாறு.

அனுப்புநர்: திரு. எம்.இளஞ்செழியன், சிறப்பு ஆய்வுக்குழு அலுவலர் / தனி வட்டாட்சியர், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகம், ஈரோடு. பெறுநர்: காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, ஈரோடு. ஐயா, ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி வட்டம், அவல்பூந்துறை சார்பதிவகத்தில் சார்பதிவாளர் பொறுப்பில் பணிபுரியும் உதவியாளர் திரு.இராம.முத்துக்குமார் அவர்கள், பத்திரம் பதிவு செய்தல், பத்திர நகல்கள் வழங்குதல், வில்லங்க சான்று வழங்குதல் மற்றும் களப்பணி போன்ற சார்பதிவாளர் அலுவலக பணிகளை செய்வதற்கு நேரடியாகவும், பத்திர எழுத்தர்கள் மற்றும் அவர்களது உதவியாளர்கள் மூலமாகவும், மற்றும் இடைத்தரகர்கள் மூலமாகவும், கையூட்டாக பணம் பெறுவதாகவும், அதை பத்திர எழுத்தர் திரு.கௌரிசங்கர், வேறு சில ஆவண எழுத்தர்கள் மற்றும் முத்திரைத்தாள் விற்பனையாளர்களிடம் கொடுத்துவைத்திருந்து, அந்த வாரத்திலோ அல்லது அதற்கு பின்னிட்ட வாரத்திலோ, மாலையில் அலுவலகத்தை விட்டு புறப்படும்போது, அலுவலக கண்காணிப்பு காமிராவில் தெரியாதவாறு பெற்றுக்கொள்வதாக, ஈரோடு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளருக்கு கிடைத்த நம்பத்தகுந்த தகவலின் பேரில், நானும்,

காவல் ஆய்வாளர் திரு.G.ஆறுமுகம் மற்றும் காவல் குழுவினருடன் 23.10.2024ம் தேதி மாலை 15.40 மணிமுதல் ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி வட்டம், அவல்பூந்துறை சார்பதிவகத்தில் திடீர் ஆய்வு செய்யப்பட்டது. சோதனையின்போது, அரச்சலூர், முகாசி அனுமன்பள்ளியில் கதவு எண் 259ல் குடியிருந்து வரும் திரு.M.சந்திரசேகரன், த/பெ முத்துசாமி என்பவரிடமிருந்து ரூ.1,00,000/- (500 X 200) மற்றும் திரு.A.கார்த்திகேயன், வயது, 40, த/பெ ஆறுமுகம், என்றும் கதவு எண் 73, செங்கோடம்பாளையம், துய்யம்பூந்துறை அஞ்சல், மொடக்குறிச்சி வட்டம் என்பவரிடமிருந்து ரூ.39,500/- (500 X 79) ஆகிய தொகைகள் அவர்களால் தகுந்த முகாந்திரம் இயலாததால், அந்த தொகைகள் சார்பதிவாளருக்கு லஞ்சமாக கொடுப்பதற்காக வைத்திருக்ககூடும் என்ற சந்தேகத்தின் பேரில் அந்த தொகைகள் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் சார்பதிவாளர் பொறுப்பு திரு.இராம.முத்துக்குமார் அவர்கள் கடந்த 08.10.2024ம் தேதி ரூ.40,000/-, 09.10.2024ம் தேதி ரூ.20,000/- மற்றும் ரூ.17,000/, 15.10.2024ம் தேதி ரூ.40,000/- ஆகமொத்தம் லஞ்சமாக வசூல் செய்த ரூ.1,17,000/- ஐ ஆவண எழுத்தர் திரு.கௌரிசங்கர் என்பவரிடம் உள்ளதாக தெரிவித்து, திரு.இராம.முத்துக்குமார் அவர்கள் தனது செல்போனில் இருந்து திரு.கௌரிசங்கர் அவர்களின் செல்போனுக்கு தொடர்புகொண்டு பேசி, மேற்படி தொகை ரூ.1,17,000/-ஐ உடனடியாக சார்பதிவகத்தில் கொண்டுவந்து ஒப்படைக்குமாறு தெரிவித்தார். அதன்பேரில் திரு.கௌரிசங்கர் மற்றும் அவருடைய அலுவலகத்தில் முத்திரைத்தாள் விற்பனை செய்யும் திரு.தமிழ்ச்செல்வன் ஆகியோர் சார்பதிவகத்தில் ஆஜராகி, ஒரு கையேட்டில், SRO வரவு, 08.10.2024ம் தேதி ரூ.40,000/-, 09.10.2024ம் தேதி ரூ.20,000/- மற்றும் ரூ.17,000/-, 15.10.2024ம் தேதி ரூ.40,000/- என்று பென்சிலால் எழுதப்பட்டிருந்ததை காட்டி, சார்பதிவாளர் அவர்களின் பணம் ரூ.1,17,000/- (500

X 234) என்று கூறி, 21, முத்துக்குமாரசாமி தெரு, வெள்ளோடு ரோடு, அவல்பூந்துறை என்ற முகவரியில் உள்ள அவர்களது அலுவலகத்திலிருந்து கொண்டுவந்து ஒப்படைத்த தொகை ரூ.1,17,000/- அந்த கையேடு மற்றும் சார்பதிவாளர் அலுவலக கையிருப்பு பதிவேடு ஆகியவை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. சார்பதிவாளர் பொறுப்பு திரு.இராம.முத்துக்குமார் அவர்கள் பொதுமக்களிடமிருந்து நேரடியாகவோ, பத்திர எழுத்தர்கள் மற்றும் இதர நபர்கள் மூலமாகவோ சார்பதிவக பணிகளை மேற்கொள்வதற்காக லஞ்சமாக பெற்ற தொகைகளை திரு.கௌரிசங்கர் என்ற ஆவண எழுத்தர் மற்றும் திரு.தமிழ்ச்செல்வன் என்ற முத்திரைத்தாள் விற்பனையாளர் ஆகியோரிடம் கொடுத்து வைத்திருந்ததும், அந்த தொகையானது சார்பதிவாளரது லஞ்சப்பணம் என்று தெரிந்தே அவர்கள் பெற்று வைத்திருந்ததும் தெரியவருகிறது. மேலும் திரு.சந்திரசேகரன் மற்றும் திரு.கார்த்திகேயன் ஆகியோர்கள் சார்பதிவாளருக்கு பணம் கொடுத்து தங்களது காரியங்களை சாதித்துக்கொள்வதற்காக பணம் வைத்திருந்திருக்க கூடும் என தெரியவருகிறது. இந்த திடீர் ஆய்வு சம்மந்தமான முழு விபரங்கள் அனைத்தும் எனது நடவடிக்கைகள் நாள் 23.10.2024 ன்படி மாலை 17.30 மணிமுதல் இரவு 22.00 மணிவரை திடீர் ஆய்வு நடவடிக்கை குறிப்பு தயார் செய்யப்பட்டது. இந்த திடீர் ஆய்வின்போது கைப்பற்றப்பட்ட மொத்த தொகை ரூ.2,56,500/- மற்றும் அட்டையில் SRI RAJAGANESH PRESS ERODE 638001 என்று லேபிள் ஒட்டப்பட்டிருந்த, அட்டையின் உள்புறம் வா.தமிழ்செல்வன், முத்திரைத்தாள் விற்பனையாளர் அவல்பூந்துறை, 638115 ஈரோடு, தமிழ்நாடு உரிமம் எண் 17/1997 என்று சீல் வைக்கப்பட்டிருந்த ஒரு கையேடு, அலுவலக கையிருப்பு பதிவேடு எனது நடவடிக்கைகள் நாள் 23.10.2024, திரு.இராம.முத்துக்குமார் அவர்களின் வாக்குமூலம் ஆகியவற்றை இத்துடன் இணைத்து ஒப்படைக்கிறேன். மேற்கண்ட நிகழ்வுகள் குறித்து உண்மை

நிலை அறிய தக்க புலன்விசாரணை செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, (sd xxxx) (எம்.இளஞ்செழியன்) சிறப்பு ஆய்வுக்குழு அலுவலர் / தனி வட்டாட்சியர், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகம், ஈரோடு. இடம்: ஈரோடு. நாள் : 24.10.2024. இணைப்பு: 1) சிறப்பு ஆய்வுக்குழு அலுவலர் / தனிவட்டாட்சியர், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகம், ஈரோடு, அவர்களின் நடவடிக்கைகள் நாள்:23.10.2024, 2) திரு.இராம.முத்துக்குமார் அவர்களின் வாக்குமூலம், 3) பணம் ரூ.2,56,500/-, 4) கையேடு மற்றும் 5) அலுவலக கையிருப்பு பதிவேடு.

Sir,

I received the complaint on 24.10.2024 at 11.00 hrs, after getting oral permission from the DVAC, Chennai, I am registering a case in Erode V&AC Cr. No.07/AC/2024/ER, u/s 7(a), 7A and 12 r/w 7(a) of the Prevention of Corruption Act, 1988, as amended in 2018 on 24.10.2024 at 11.00 hrs (sd xxxxx), 24.10.2024 (G.Arumugam), Inspector of Police, Vigilance and Anti-Corruption, Erode.

Original FIR along with the original typed complaint and surprise check proceedings of Tr.M.Elanchezhian, Special Deputy Inspection Cell Officer / Tahsildar, District Backward Class welfare Office, Erode is submitted to the Hon'ble Chief Judicial Magistrate and Special Judge, Erode and copy of FIR submitted to Director, Vigilance and Anti-Corruption, Chennai.

24/10/2024

(G.Arumugam)
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Erode.